III. INFORMATION REGARDING PRIVATE NOTICE QUESTION No. 1

*திரு. கே. ராஜாராம் : தலைவர் அவர்களே, சென்ற மாதம் 27-ந் தேதி நான் கொடுத்த கேள்வி—தூத்துக்குடி நிகழ்ச்சி சம்பந்தமானது—அனுமதிக்கப்பட்டதாகச் சொன்னீர்கள். இது வரையிலும் அந்த அவசரக் கேள்விக்கு பதில் கிடைக்கவில்லை. ஆனால் இன்றைக்கு முதல் அமைச்சர் அவர்கள் உடல் நலமின்றி இருப்பதால் வரவில்லை. எனவே வேறு அமைச்சர் யாராவது அதற்குப் பதில் சொல்லுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : தலைவர் அவர்களே, தூத்துக்குடி கொலை சம்பந்தமான விவரங்களை மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் கேட்டிருந்தார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்கள் அந்த விவரங்களைத் தருவதாக இருந்தது. இன்றைக்குக் கூட உடல் நலம் குன்றியிருந்தாலும், இங்கே வந்து பதில் சொல்ல வேண்டும் என்ற ஆர்வத்தோடு இருந்தார்கள். இருந்தாலும் இப்போது வர முடியாத சூழ்நிலையில் இருக்கிறார். நான் இப்போது அவரைப் பார்த்து விட்டு வந்தேன். அந்த விவரங்களைப்பற்றித் தனியாகக் கேள்வி கேட்டால், நான் சொல்வதற்கு ஆட்சேபணையில்லை. ஆனால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே வந்தால், இந்த மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்த கேள்விக்கு அவரே பதில் சொல்லுவது பொருத்தமாக இருக்கும் என்று இதை ஒத்தி வைக்கும்படி கேட்டுக்கொண்டேன். இப்போது தூத்துக்குடியில் நிச்சயமாக அமைதி நிலவி வருகிறது. எல்லா கட்சித் தலைவர்களும் கலெக்டர் தலைமையில் கூடி இது போன்ற நிகழ்ச்சிகள் வராமல் தடுக்க எல்லா முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. தவறு செய்தவர்கள் மீது நமது காவல் துறை சிறந்த முறையில் நடவடிக்கை எடுத்து வருகிறது என்பது நமக்குத் தெரிந்ததாகும். ஆகவே இந்தக் கேள்வியை மாண்புமிகு முதல்வர் வந்ததற்குப் பிறகு எடுத்துக் கொள்வதுதான் சரியாக இருக்கும்.

IV. PRIVILEGE MOTION AGAINST THIRU R. RAMAN NAIR, M.L.C. AND EDITOR, PRINTER AND PUBLISHER OF 'NAVASAKTHI' *Re* STATEMENT PUBLISHED IN 'NAVASAKTHI'

MR. CHAIRMAN : I have received a motion raising a matter of privilege from Thiru S.Raghavanandam and Thiru T. K. Ponnuvelu. I request the Members Thiru S. Raghavanandam and Thiru T. K. Ponnuvelu, the Leader of the Opposition, the Member concerned — Thiru R. Raman Nair — and the Leader of the House — the Hon. Minister to state how the matter involves *prima facie* privilege.

THIRU T. K. PONNUVELU : Sir, I wish to raise a matter of privilege and request the consent of the Hon. Chairman under rule 157 of the Tamil Nadu Legislative Council Rules to ask the leave of the House to refer the matter to the Committee of Privileges.